சிவமயம்

குமரகுருபரன்

மலர் 14] 1963-வரு ஆவணி-மீ 1ம் உ (17-8-63) [இதழ் 8

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1¾

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20. நுங்கம்பாக்கம் ஹைரோடு. சென்னை – 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	சிதம்பரச்செய்யுட்கோவை (கட்டுரை 71) ...	409
2.	திருவருட்பயன்—தெளிவுரை ...	414
3.	திருவாசகம் திருஅம்மானை	417
4.	அன்பு வழியே ஆண்டவனை அடையும் இன்பவழி....	421
5.	பாம்பே	425
6.	திருஞானசம்பந்தர் அற்புதத் திருப்பதிகங்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு)	431
7.	ஏத்தலும் பழித்தலும் ...	434
8.	Hymns of the Tamil Saivite Saints	437
9.	ஈங்கோய் இலக்கியம்	438
10.	இராமலிங்கசற்குரு புலம்பற்கண்ணி ...	444
11.	நீதிநெறிவிளக்கம் (உரை நடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும் ...	445
12.	சித்தம் சிவனோடு ஆடியது ...	449
13.	தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள். பொழிப்புரையும் ஆங்கிலமொழி பெயர்ப்பும்	451
14.	ஸ்ரீ அருணஜடேசுவரர் சந்தனமெய்ப்பூச்சு நிதி ரூபாய் 4,000 ...	453

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 14 || சோபகிருது-ஆடு ஆவணி திங்கள் 1-ம்வ [17-8-63] || இதழ் 8

சிதம்பரச் செய்யுட் கோவை

முதுபெரும் புலவர்

ஸ்ரீமத் சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவெண்காடு.

[கட்டுரை 71]

உயிர்கள் பிறந்தும் இறந்தும் உழல்கின்றன. அவ்வாறு அவை உழல்வதற்கு ஓர் ஏது இருத்தல் வேண்டும். அவ் வேதுவை உணர்ந்து அவ்வுழற்சியிற்படாது நீங்குவதே அறிவு டைமைக்குத் தகும். அத்தகைமை இல்லாதவை நல்லுயிர்கள் அல்ல. மக்களுயிரே நல்லுயிர் என்று ஏனையுயிர்களின் நீக்கி, ஒக்கிக் கூறும் நோக்கினர் பலர் உளர். எல்லா மக்களுயிரும் பிறப்பிறப்பைத் தவிர்க்கும் அறிவுடையன அல்ல. சிலவுயிரே பிறவிவேண்டா என்று திருவருளை வேண்டுகின்றன. அவற் றையே நல்லுயிர் எனல் தகும். அத்தகைய நல்லுயிர்க்கே

பிறவாதும் இறவாதும் பேரின்ப வாழ்வுறும் அழியா நன்மை எய்தும். அந்நன்மையே 'சிவம்' ஆகும். அந்நன்மையை அடைந்து பேரின்பம் நுகர்தலே 'சிவாநுபவம்' எனப்படும். சிவ ஞானமாபாடியத்தில் இதை உணரலாம்.

பேரின்பநாட்டம் உடையவரே பிறப்பிறப்பைக் கடப்பர். சிற்றின்பம் வேண்டி, அதற்குரிய மயக்கநெறியில் அகலாது ஒழுகும் சிற்றறிவினரே பிறவிப்பெருங் கடலில் அழுந்தியழிவர். அவர்க்கே பிறப்பும் இறப்பும் சொந்தம். "பேசிற்றும் ஈசனே எந் தாய் எந்தை பெருமானே என்றென்றே பேசிப்பேசி"யும் "திரு நீறே நிறையப் பூசி"யும் "போற்றி எம்பெருமானே என்று பின்று நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை ஆண்டானே" என்று ஆளப்பெறுந்தகுதிகளைக் குறித்தருளினர் மணிவாசகர். ஆண்டவனுல் ஆளப்பெருமைக்குரிய தகுதி 'அவாவெள்ளக் கள்ளம்' என ஒன்றே அங்குக் குறிக்கப்பட்டது. அவ்வொன்றி லேயே பிறவிப் பெருங்கடலில் வீழ்தற்குரிய ஏது முழுதும் அடங்கிவிட்டன. 'மாசற்றமணிக்குன்றே' என அழைத்து, "அவாவெள்ளக்கள்வனேனை நீ ஆட்கொண்டவண்ணம் தான் என்னே?" என வினவியதன் நயம், பயம், பக்தி உடையவர்க்கே விளங்கும். ஏனையோர்க்கு எப்படி ஐயா விளங்கும்? ஏனையா விளங்கும்? பேசினுல் ஈசனே.......... பேசிப் பேசி என்றருளிய மணிவாசகர் எப்பொழுது பேசவேண்டும்! எப்படிப் பேசவேண் டும்! எவனைப் பேசவேண்டும்! அவன் எத்தகையவன்? பேசினுல் என்ன பயன் அவனுல் உண்டாகும்? யார்க்கு அப்பயன் அவ னுல் கிடைத்தது? அவர்க்கு அப்பயனை எய்த என்ன தகுதி இருந்தது? அத்தகுதியில்லார்க்குப் பிறப்பு எஞ்ஞான்றும் இடை யறுது தொடர்ந்து வரும் என்பவை முதலிய பல கருத்துக்களைத் தோற்றும் ஓர் அருந்திருப் பெருவெண்பாவை (ப் 'பண்டாய நான்மறை' என்ற தலைப்பின் கீழ்)க் காணலாம்.

"காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு."

பிறப்பை யொழித்துப் பேரின்பம் பெற்று, அழியா நிலை எய்த விரும்பும் உயிர்க்கு ஆநந்தக் கூத்தன் அநுக்கிரகத்தைக் குறிக்கும் தூக்கிய திருவடியைத் தத்துவ ஞானசிந்தனை யொடுதொழுதால் தான் அது சித்திக்கும். அதனால்தான் நம் ஆசாரியப் பெருமக்கள் திருவாக்கில், 'வீட எடுத்தது காலனை' என்பது முதலாகப் பல இடங்களில் அக்காலன் அழிவைத் திருவடித் தொடர்புடன் இயைத்துக் கூறியருளினர்.

'காலனைக் காலால் உதைத்தல் பாடி' 'காலன் ஆருயிர் கொண்ட பூங்கழலாய்' 'காலாற் காலனைக் காய்ந்த கடுந்தழற் பிழம்பன்னமேனிச் செய்யனே'என்னுந் திருவாசகங்களை நோக்கி யுணர்மின்கள். பிறப்பும் இறப்பும் அறப்போக்கிப் பேரின்பம் பெறப்பேணும் அன்பர்க்கு ஒரே தொழில்தான் தேவை. அது தான் திருக்கூத்தையுணருந் திறம். அத்திறம் எளிதன்று. இங்கே போற்றிப்பஃறொடையில் 42-49 ஆம் கண்ணிகளைக் கற்றுணர்ந்து கொள்ளல் நல்லதாகும்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தில்லைச் சிதம்பரத்தில் தரிசனம் புரியுங்கால், "வெய்ய கூற்று ஒடுங்க உறுங்கடிப் போதவையே உணர்வுற்றவர்" என்று திருவாசகம் உணர்த்திய வாறு உணர்வுற்றார். சேக்கிழார் சுவாமிகள் அருளியவாறு இது:-

"அண்ண லார்தமக் களித்தமெய்ஞ்
ஞானமே யானஅம்பல மும்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும்
ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும்
பிட்டெழுங் களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர்
போற்றுவார் புனிதரா டியபொற்பு."

உள்நிறைந்தது அகம். கண்ணின் முன்பு-புறம். அக்காட்சியில் புறக் காட்சி தில்லையில். அகத்திற் கண்டவாறே புறத்திற் கண்ட உண்மையை உணர்த்திற்று இத் திருப்பாடல்.

“ உணர்வின் நேர்பெற வருஞ்சிவ
போகத்தை ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும்
எளிவர அருளினை” எனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே
ஏத்திமுன் எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர்;
ஆடினர்; பொழிந்தனர் விழிமாரி.” 161

உணர்விற்பெற வரிய சிவபோகம் பெரினும் எளிதிற் பெறக் கிடைத்தது. கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் என்று தில்லை வாழந்தணர் சிறப்பைத் தொடக்கமாகக் கொண்டு கூறிய திருப்பதிகமே அது. இன்றும் தில்லையம் பலத்தில் சிவ வேள்வி செவ்விதின் நடைபெறுகின்றது. உலகிற் கலிநீங்கிச் செல்வம் மலிவுற்றிருப்பதற்கு முதற்காரணம் அதுவே. ஏனைய தலங்களில் வேள்விச் சிறப்பு அத்தனை காணக்கிடையாது.

“ இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
பொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
ஒருகூற்றின் கூத்தை உணராய் எனின்மற்றப்
பொருகூற்றம் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே”.

இதில் 1. இருகூற்றுருவம் என்றது அம்மையப்பர் திருக் கோலம். 2. ஒரு கூறு என்றது அம்மையின் கூறு அன்று. அப்பன் கூறு. ஏன்? அதுதான் ஆடுதற்குரிய கூறு. ஆட்டத் தைப் பார்த்திருக்குங்கூறே அம்மைக் குரியது. 3. அக்கூத்தை யுணர்தல், இக்கட்டுரைக்கண் மேற்கொண்ட பெரிய புராணத் திருப்பாடல் இரண்டனுள் முன்னதன் உட்கோள் ஆகும். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்க்கு அச்சிவபோகம் அவரது உணர்வின் நேர்பெற வரும். ஏனையோர்க்கு உணர்விற் பெற அருஞ்சிவ போகம் ஆம். அவர்க்கு எளிவர அருளிய உண்மை யால் அச்சிவபோகத்தின் அருமையுணர்த்தியதே அது. வருஞ் சிவபோகம் அருஞ்சிவ போகம் என்றிருவகையிலும் பிரித்துப்

பொருள் கொள்ளலாம் ஆயினும், 'எளிவர அருளினை' என்ற தால் அருமையே ஆண்டுக் கொள்ளற் பாலது. வருதற் றெழிலைக் குறித்தாரல்லர் ஆசிரியர் சேக்கிழார் பெருமானார்:

இருகூறு :— (1) மெய்ஞ்ஞானமேயான அம்பலம்.

(2) அந்த ஞானத் தெழுந்த ஆனந்தப் பெருந் தனிக்கூத்து.

உருவம் :- அவ்விரண்டும் இயைந்த குணகுணிசம்பந்தம்; அன்னதொரு ஞானானந்தப் பெரிய பொருள் (பரப் பிரமம்).

ஒருகூறு :— ஞானத் தெழும் ஆநந்த முதல்.

கூத்து :— ஐந்தொழிலும் அவற்றுள் தலை சிறந்த அருளலும்.

உணர்தல் :— பெரிய புராணத்தின் இவ்விரு பாடலிலும் உணர்த் திய வாறு வழிபடல்.

உணர்தற் பயன் :- பொருகூற்றம் (யமன்) தோற்றப் புலம் பாமை அழியா இன்பப் பெருநிலைப் பேறு.

(தொடரும்)

★ கந்த புராண வசனம் ★

புதிய பதிப்பு

சுபகிருது ஆண்டு விசய தசமி வெளியீடு

697 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ. 3.

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்" 53, பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன் பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை—5

திருவருட் பயன் — தெளிவுரை

பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 14. இதழ் 7-ன் தொடர்ச்சி)

2. உயிரவை நிலை.

இது உயிர் அவை நிலை எனப் பிரிக்கப்படும். உயிர்களாகிய அவற்றின் நிலையை இவ்வதிகாரத்தில் விரித்துக் கூறுதலின் இது உயிரவை நிலை எனப்பெயர் பெற்றது. பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றனுள் பதியின் நிலையை முதலதிகாரத்துக் கூறிய ஆசிரியர் அடுத்துப் பசுவின் நிலையை இவ்வதிகாரத்துக் கூறுகின்றார் ஆதலின் மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று.

11. "பிறந்தநாள் மேலும் பிறக்குந்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை"

(தெ—ரை) உயிர்கள் முன்பு பிறந்த நாளையும் இனிப் பிறக்கப் போகின்ற நாட்களையும் இத்துணையென்று அறுதியிட்டுச் சொல்ல இயலாது. அதுபோல உடலையும் உலகையும் துறந்து, வீடடைந் தோர்களின் தொகையையும், இனி அடைய இருப்பவர்களின் தொகையையும் அறுதியிட்டுச் சொல்ல இயலாது என்பதாம்.

துறந்தோர் தொகை பிறந்தநாள் போலும், துறப்போர் தொகை மேலும் பிறக்குந்நாள் போலும் எனக் கூட்டிப் பொருள் காண்க. உயிர்கள் இதுவரைப் பிறந்த நாளையும், இனிப் பிறக்க இருக்கிற நாளையும் அறுதியிட இயலாதவாறு போல,

இதுவரை வீடடைந்தோர் தொகையையும், இனி வீடடைய இருக்கின்றவர்கள் தொகையையும் இத்துணையென அறுதியிட்டுச் சொல்ல இயலாதென்பது கருத்து. இங்ஙனம் மனித இனத்துள் ஏகதேசமாகிய ஒவ்வொரு பகுதியினரையே அளவிட்டுச் சொல்ல இயலாது என்பதால் உயிர்கள் பல என்பது பெறப்பட்டதாம். இப்பாடலின் அமைப்பு "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து, இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" என்பதனோடு ஒத்துள்ளது.

12. "திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தார் ஆயும் உளர்."

(தெ – ரை) ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடையாரைச் சகலர் என்பர். இவர்களையே திரிமலத்தார் என்று குறிக்கின்றார் ஆசிரியர். அம் மும்மலங்களுள் ஒன்றாகிய மாயையினின்றும் நீங்கி ஏனை இருமலங்களையும் உடையாரைப் பிரளயாகலர் என்பர். இவர்களைத் தவிர மாயை கன்மமாகிய இரு மலங்களுமின்றி ஆணவமாகிய ஒரு மலமே உடையாரை விஞ்ஞான கலர் என்பர்.

எனவே உயிரினங்கள் மூவகைப்படும் என்பது கருத்து.

13. "மூன்றுதிறத் துள்ளாரும் மூலமலத் துள்ளார்கள்
தோன்றலர்தொத் துள்ளார் துணை."

(தெ – ரை) மேற் கூறப்பட்ட மூவகையாரும் ஆணவ மலத்தால் பிணிக்கப்பட்டவர்களே ஆவர். அவர்களுள் மாயையைத் துணையாகக் கொண்டுள்ள சகலர் என்பார் மலத்தினால் பிணிக்கப்பட்டிருக்கின்ற நிலையை அறியாதவர்களாவர் என்பதாம்.

எனவே விஞ்ஞான கலரும், பிரளயா கலரும் தமக்கு மலப் பிணிப்பு உளதாதலை அறிந்தவர்கள் என்பதாம். துணை தொத்துத் தோன்றலர் எனக்கூட்டிப் பொருளுரைத்துக் கொள்க. துணை-மாயையைத் துணையாக உள்ள சகலர். தொத்து-மலப்பிணிப்பு.

14. "கண்டவற்றை நாளும் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக் கென்றோ செயல்."

(தெ – ரை) நாள்தோறும் நனவிலே காண்கின்ற பொருள்களை கனவிலே மறந்து மாறுபடக் காண்கின்ற திண்ணிய வலிமை உடைய உயிர்களுக்கு சுதந்திரம் ஏதுளது? ஒன்றுமில்லை. என்பதாம்.

நனவிற் காணுகின்ற பொருள்களைக் கனவில் மறப்பதும் உண்டு; அன்றி மாறுபடக் காண்பதும் உண்டு. இச்சிறு நிலையிலேயே ஆற்றலின்றி யிருக்கும் உயிர்கள் தம் வயத்தவாயும், முற்றும் உணர்வனவாயும் இருப்பது எ ங் ங ன ம் இயலும்? இயலாது. ஆதலின் உயிர்கள் உணர்த்த உணரும் இயல்பினவே என்பது பெறப்படும். திண் திறல்-திண்ணிய வலிமை. ஈண்டு அது ஆகுபெயராய் உயிர்களை உணர்த்திற்று. ஒன்றுனும் வலிமையில்லாத உயிரை இங்ஙனம் சிறப்பித்துக் கூறியது இகழ்ச்சிக் குறிப்பாம்; "உடம்போடுயிரிடை நட்பு" என்பதுபோல.

15. பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)
அறிவென்ற பேர்நன்(று) அற.

(தெ – ரை) மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளில் யாதாயினும் ஒன்றின் துணையினால்தான் உயிர்கள் உணர முடியும். உண்மை இங்ஙனமாக, உயிர்களுக்கு அறிவு என்று பெயர் வைத்திருப்பது மிகவும் அழகிதாக இருக்கின்றது என்பதாம்.

புந்தி – அறிவு. அஃதுஈண்டு ஆகுபெயராய் உயிர்களை உணர்த்திற்று. அறிவென்ற பேர் நன்றற என்பது மேலையது போல இகழ்ச்சிக் குறிப்பாய்த் தாமாக ஒன்றையும் அறிய இயலாத உண்மையை விளக்கி நிற்கின்றது.

(தொடரும்)

திருவாசகம் திருஅம்மானை

('கையார் வளைசிலம்ப' எனத் தொடங்கும் பாசுரத்தின் விளக்கம்.)

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான், திரு. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
அண்ணாமலை நகர்.

அம்மானை:

அம்மானை என்பது மகளிர் விளையாட்டினுள் ஒன்று. (இவ்வாறே ஊசலாடல், கழங்கு, பந்து ஆடல், முதலியனவும் தமிழ் நூல்களிற் கூறப்படும்.) மூவர் அல்லது இருவர் மகளிர் ஒருங்கு கூடி, தம் கையிலுள்ள அம்மனைக்* காயை (அம்மானைக் காயாவது – உருண்டை வடிவில் (பாசிகோப்பதுபோல்) பலவகை மணிகள் கோத்துப் பின்னியிருக்கும்) மேலே யெறிந்து அது தன் கைக்கு வருமுன், கையிலுள்ளதை மேலெறிந்து முன்னதைக் கைப்பற்றி, அது வருமுன் கையிலுள்ளதை வீசி விளையாடுவது. மேலே வீசியதைக் கைப்பற்றத் தவறி அது நிலத்தில் விழுமாறுல் தோல்வி. இது மூவரம்மானை என்ற நூலிலும், பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களில் ஒன்ருக வருவதும் கொண்டறிக. எங்கள் மணிவாசகப் பெருந்தகையார் பாடிய தாகலின் இது திரு அம்மானை யெனப்பட்டதென்க.

பாடலின் பொழிப்புரை:

அம்மானை யாடும் தோழியே! நாம் கையிலுள்ளதனை மேலெறிந்து பற்றுவதாற் கையிலுள்ள வளையல்கள் ஒலிக்கின்றன. மேலெறிந்தது விழுமிடம் நோக்கி முகம் அங்கு மிங்கு மசைதலின் காதிலணிந்த குழைகள் ஆடுகின்றன. அவற்றை எறிந்தும் பற்றியும் ஆடும் வேகத்தினுல் நமது குழல் சரிந்து

---

* 'அம்மனை தங்கையிற் கொண்டு' (சிலப்–29 அம்மனை வரி 3)

புரள்கின்றன. அவை புரளவே தலையிற் செருகியிருந்த மாலையின் மலர்கள் வெளிப்பட்டுத் தேன் சொட்டுகின்றன. அத்தேனையுண்ட களிப்பினால் வண்டினம் ரீங்காரம் பாடுகின்றன.

இவ்வாறு சிலம்ப, ஆட, புரள, ஒலிப்ப, நாம் ஆடும் ஆடலைப் பாடிக் கொண்டு ஆடுவோமாக. யாரைப் பாடுவது? நம் ஐயாற் றப்பராகிய செம்பொற் சோதீசுரரைத்தான். அவர் எத்தகையர்? அவர் (பவளக்குன்றம் போலும்) சிவந்த மேனியையுடையார். அதன்மேல் திருவெண்ணீறு பூசியவர். தமது கைகளிரண்டும் ஒன்று சேர்தலில்லாத தமக்கு மேற்பட்டவர் தம்மையன்றிப் பிறரில்லாத தன்மையுடையார்; எள்ளில் எண்ணெய் போல் எங்கும் நிறைந்தவர். உண்மையன்பருக்கு உள்பொருளாகி வெளிப்பட்டருளுவர். போலிகட்கு இல்பொருளாய் மறைந்து நிற்பவர்; இன்னும் அவர் வேதாகம முதலிய நூல்களால் அறுதியிட்டு நிறுவப்படும் பொருளாகவும் உள்ளார். அத்தகையராய் நமது திருவையாற்றில் வீற்றிருந்தருளி விளங்குபவர்; அவரைப் பாடிக்கொண்டு நாம் அம்மனை ஆடுவோமாக தோழியே. என்பது பொழிப்புரை.

விளக்கவுரை:

செய்யானை வெண்ணீறணிந்தானை — சிவபெருமான் செந்நிறம் ஆதலின் செய்யானை என்றார். "வெள்ளிப்பொடிப் பவளப்புறம் பூசிய வேதியனே" என்பது அப்பர் திருவிருத்தம். சேர்ந்தறியாக்கையான் — அகங்கைகள் இரண்டும் ஒன்று சேர்வது பிறரைக் கும்பிட நேரும்பொழுது மட்டும்தான். ஆதலின் நமது சிவபரம்பொருள் பிறரெவரையும் கும்பிடவேண்டிய அவசியமில்லாதவர். திருமால் முதலிய தேவர், தம்மை வணங்கினால் அவர்களைத் தம் ஒரு கையை அமர்த்தி ஆசீர்வதிப்பதல்லது பிறிதென்? இப்பொருள் சைவபரம் பரையின் வந்த புலவர்பெருமக்கள் பலரிடம் கேட்டறிந்த உண்மையாகும். திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையென்பார், தாமெழுதிய திருவாசகப் பொழிப்புரை நூலில் இப்பாடத்தை "சேர்ந்தறியார்க் கையானை" என்று திரித்துக்கொண்டு வேறு பொருள் கூறினர். எங்குஞ்செறிந்தான்—இதன் விளக்கத்தை சிவஞான சித்தியார் 'உலகினுக்குயிருமாகி யுலகுமாய் நின்றதோரார்'

என்ற 9-ஆம் சூத்திரம் 48-ஆம் திருவிருத்தத்தாலும், இதன் எடுத்துக்காட்டாகத் திகழும் ஷை 52, 53-ஆம் திருவிருத்தத் தாலும் உணர்க.

அன்பர்க்கு மெய்யான்:

'அற்றவர்க்கற்ற சிவன் உறைகின்ற ஆலவா யாவது மிதுவே' என் னும் எங்கள் சம்பந்த மூர்த்தி நாயனர் தமிழ் மறையாலறிக.

அல்லாதார்க்கு அல்லாதவன்:

'பொய்யர்தம் பொய்யனே'—திருப்பொற் சுண்ணம் பாடல் 12 என்னும் இந்நூலாலும் அறிக.

வேதியன் :

"கைகளும் தலைமீ தேறக் கண்ணில்ஆ
னந்த வெள்ளம்
மெய்யெலாம் பொழிய வேத முதல்வரைப்
பணிந்து போற்றி
ஐயனே அடிய னேனை அஞ்சலென்
றருள வல்ல
மெய்யனே என்று வீட லாலவாய்
விளம்ப லுற்றார்"

என்னும் எங்கள் சேக்கிழார் பெருமான் திருவாக்கால் (திரு ஞானசம்பந்தர் புராணம் 665 ஆம் பாடலால்) அறிக.

இலக்கணக் குறிப்பு :

மை ஆர் குழல் — மேகம் போன்ற குழல். மை — மேகத் துக்குப் பண்பாகு பெயர். ஆர் – உவம வாசகம். செய்யான் – வெண்ணீறு – முரண் தொடை. வேதியன் – இதன் முதனிலை யாகிய வேதம் என்பது உபலக்கணத்தால் ஆகம முதலிய நூல் களையும் தழீஇ நின்றது.

பாடுதும்— தும் தன்மைப் பன்மை விகுதி. இங்கு உளப் பாட்டுப் பொருளில் வந்தது.

காண் — முன்னிலையசை.

அம்மானை — அம்மானையாடும் தோழியை யுணர்த்தியது தொழிலாகு பெயர்.

அம்மானாய் — ஐகார வீற்றுப் பெயராகையின் அது ஆய் என்னும் விளியுருபு ஏற்றது.

"ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றுயு மாகும்"

என்ற நன்னூல் விதிப்படி. (நன்னூல் – பெயரியல் 49. ஆம் சூத்திரம்)

இராகம்: வாசஸ்பதி தாளம்: ஆதி

பல்லவி

வந்தருள் புரிந்திட திருச்செந்தூரில் வளரும்
கந்தனே அருள்வடி வேலவனே — குகனே (வந்தருள்)

அனுபல்லவி

விந்தைபலவும் காட்டி வினைதீர்த்தருளும் வேலா
சந்தமும் செழிக்க சன்மார்க்க மருள்சீலா (வந்தருள்)

சரணம்

ஐந்து பூதங்கள் அஞ்சும் ஆனந்தக் கூத்தனருள்
மைந்தனே மகிபனே உமைமகிழ் பாலகனே
பைந்தமிழ் சகலமும் போற்றும் தயாபரனே
நைந்துருகிடும் உள்ளம் நல்வழி நடந்திட (வந்தருள்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

அன்பு வழியே

ஆண்டவனை அடையும் இன்பவழி

திரு. க. சுப்பிரமணியன் அவர்கள்

ஆதஞர்

அகத்தூய்மை ஆறறிவு கொண்ட ஆன்மாவிற்கு மிகவும் இன்றியமையாத தொன்று. அஃதின்றேல் அவ்வான்மா விலங்கொடு ஒப்ப நினைக்கப் பெறும் என்பது அறிஞர் கண்ட முடிபு. அன்பு என்பது அகத்தினின்றும் எழக்கூடியது. அகத்திலே அழுக்கின்றிருந்தால் தான் அங்கு அன்பு குடிகொள்ள முடிகிறது. பண்பு எனும் பளிங்கு மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூண்தான் அன்பு எனப்படும். பண்பு நிலைபெற வேண்டுமாயின் அன்பு அவசியப்படுகிறது. எனவே, பண்பிற்கு அன்பும், அன்பிற்கு அகத்தூய்மையும் வேண்டற்பாலது.

புற ஒழுக்க முடையார் போலி அன்பராயும் உள் ஒழுக்க முடையார் உண்மை அன்பராயும் ஒழுகுவதைக் காணலாம். அன்புடையார் எனக் கூறின் அவர் அகத்தூய்மை உடையவர் என்பது வெளிப்படை. செம்பிலே களிம்பு ஏறுவதால் செம்பின் ஒளி மழுங்குகிறது. உள்ளத்திலே அழுக்கு ஏறுவதால் உள்ளத்தின் ஒளி குன்றுகிறது. களிம்பு உள்ளவரை செம்பு உபயோக மற்றதாய் பயனின்றிக் கிடக்கிறது. அழுக்கு உள்ள வரை உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் குடிகொள்வதில்லை. உயர்ந்த எண்ணங்களை எண்ண வேண்டிய உள்ளம் தாழ்ந்த எண்ணங்கட்கு இடம் கொடுத்துத் தாழ்மையுறுகிறது. செம்பிலிருந்து களிம்பைப் பிரிக்க முடியும். ஏன்? களிம்பு ஏருத வண்ணம் பாதுகாக்கவும் இயலும்- இயல்பிலே களிம்புடன் கூடியது அல்ல செம்பு. உள்ளத்தில் உறையும் கள்ளமுடை ஆணவத்தையும் உள்ளத்தினின்றும் பிரிக்க முடியும். முடியாத

செயலன்று அது. தீயஎண்ணங்கட்கு இடம் கொடாத வண்ணம் மனதைப் பாதுகாக்கவும் இயலும். உள்ளம் இயல்பிலே அழுக்குடையது அல்ல!

எனவே அறிவு என்னும் அங்குசத்தின் துணைகொண்டு, மலம் எனும் மதயானை நம் மனத்தைத் தாக்காத வண்ணம் பாதுகாப்பின் அன்பென்னும் தெய்வீகம் அகத்திலே குடி கொண்டு அருளாட்சி புரிவதைக் காணலாம். அன்பு குடி கொண்ட இடத்தில் ஆண்டவன் விரும்பி உறைகிறுன். அடைய முடியாத – அறிதற்கரிய பெருமானை எளிதிற் காணும் வழி அன்புவழி! அதுவே இன்ப வழி!

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு." என்பது குறள்.

அன்புள்ளமுடைய மக்கள் தங்களது எலும்பையும் கூட பிறர் பொருட்டுத் தியாகம் செய்வரெனில் அவர் தம் அன்பை அளவிட்டுரைத்தல் கூடுமோ?

உறுப்புக்களில் சிறந்தது கண். அந்தக் கண்ணையும் இழக்கத் துணிந்தார் ஓர் அடியார். அவரை அத்தியாகத்திற்குத் தூண்டியது எது? அன்பு! ஆம். காளத்தியப்பர் மீதுகொண்ட அன்பு. அவ்வன்பினுல் வேட்டுவ குலத்துதித்த திண்ணனுர் விண்ணவர் குலத்தினும் மேம்பட்ட கண்ணப்பரானுர்.

பற்றற்ற ஞானிகளாலும் கூட முற்றும் துறக்க முடியாத குழந்தைச் செல்வத்தை – தனது செல்வமகன் சீராளத்தேவரை அடியவர் பொருட்டுத் தியாகம் செய்த அண்ணல் சிறுத்தொண்டரை அந்த அளவிற்குத் தூண்டியது எது? அன்பு! ஆம் சிவபரம் பொருளின் மீதுகொண்ட எல்லையற்ற காதல்!

சேரியில் வாழ்ந்த நந்தனுர் சித்தத்தைச் சிவன் பால் வைத்தார். சிவசீலராய் விளங்கினுர். சேரிவாழ் பறையர் சிவனடி சிந்திக்கலாம். ஆனுல் சிவனகம் புகுதல் கூடாது என்பது அன்றைய சமூகத்தின் கொள்கை. சாதியிற் பறையனுயினும் ஆதியந்தமில்லா அமரனை அடைந்தே தீருவேன் எனத்துணிவு

கொண்டார் நந்தனார். சிந்தனையைச் சிவனுக்கு ஆக்கினார். அவர் பேச்செல்லாம் தில்லை. அவர் மூச்செல்லாம் சிவம். அவர் செயலெல்லாம் சிவபரம் பொருளுக்கே! சிவனடிக்கே அன்பு செலுத்தும் சிவசீலர் நந்தனார். தாம் காணும் பொருளிடத் தெல்லாம் சிவத்தைக் கண்டார். சிவத்தினுள்ளே அன்பைக் கண்டார். இங்ஙனம் சிவவாழ்வை அமைத்துத் தவவாழ்வை மேற்கொண்டார்.

அன்புக் கனியை ஆராவமுதைத் தில்லை சென்று பருக நினைத்தது அவரது திருவுள்ளம். அன்புள்ளம் கொண்ட அம்பல வாணரை அணுக முதலில் தன்னை அன்பிற்கு அடிமையாக்கிக் கொண்டார். அன்பைத் தன்னுள்ளே அமைத்து ஆடிப்பாடி மகிழ்ந்தார். தில்லையை அடைந்த நாயனாருக்குத் தெய்வீகக் கோலம் கிட்டிற்று. காட்டிலும் மேட்டிலும் சென்று கடுந்தவம் புரியும் ஞானிகளுக்கும் கிட்டாத ஞானக்கனியைத் தில்லையில் கண்டு சுவைத்துத் தெய்வீகமுற்ற திருநாளைப் போவாரின் வாழ்வு அன்பின் அடிப்படையில் எழுந்தது.

அன்பு வாழ்வைச் சிவ வாழ்வு என அறையலாம். அன்பும் சிவமும் ஒன்றே என்பதை அழகு தமிழில் பாடுகிறார் திருமூலர்.

'அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.'

'ஈனக் குடியில் பிறந்த நந்தன் ஈசனைக் காண்பதா?' என இகழ்ந் துரைத்தோர் எண்ணிலர். 'பாவிப் பறையன் சென்று பரமன் திருவுருவைக் காண்பதா?' என ஆர்ப்பரித்தோர் பலர். நந்தனார் நாதன்பால்கொண்ட அன்பு வென்றது. அறியாத மக்கட்கு அறிவு புகட்டியது. உண்மை அன்பிற்கும் உள்ளன் பிற்கும் தடையுளதோ? நாயனார் இறைவன் மீது கொண்ட அன் பைத் தடைசெய்ய எவரால் இயன்றது? எனவேதான்,

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?'

என வினவுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

அன்புவழியில் சென்றால் அடைதற்கரிய ஆண்டவனையும் எளிதில் அடைந்து அருள்பெறலாம் என்ற அருமையான கருத்தை அடியவர்களின் வரலாற்றிலிருந்து நாம் அறிகிறோம்.

அப்பரடிகளும்,

"உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

என்பார்.

எனவே அன்பு வழிபாடு பொன்னையும் பொருளையும் கொண்டு செய்யப்படும் வழிபாட்டினும் சிறந்தது. இறைவனின் இன்னருளைப் பெறப் பொருள் வழிபாட்டிற்குப் பலநாள் ஆகிறது. ஆனால் அன்பு வழிபாட்டிற்கோவெனில் சில நாட்கள் தாம் ஆகின்றன. ஆறே நாட்களில் செயற்கரிய அன்புத்தொண்டு செய்து அன்புவழிபாட்டின் பெருமையை நிலைநாட்டினார்கண் ணப்பர். அவர் இறைவனுக்குப் பொன்னைக் கொடுக்கவில்லை. பொருளைக் கொடுக்கவில்லை. அன்பைக் கொடுத்தார். அது பொன்னையும் பொருளையும் வென்றது.

மணிவாசகரும்,

'பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருள்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.'

என்பார்.

எனவே அன்புவழியில் நின்று அருட்செல்வராய் விளங்கு வதே பிறவியெடுத்த ஆன்மாக்கள் உய்திபெறும் வழிஎன அறுதியிட்டு உறுதி கூறலாம்.

பாம்பே

திருமதி. விசாலாக்ஷி நாராயணஸ்வாமி அவர்கள்.

வரலாறு:

பாம்பே நகரத்து மக்கள் பெரும்பாலும் பாம்பேயின் 'திறந்த வெளி அரங்கில்' கூடியிருந்தார்கள். அன்றைய தினம் ஒரு பெரிய விழா. வெகு நாட்களுக்குப் பிறகு இந்த சந் தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது. சிங்கமும் புலியும் குற்ற வாளியைக் கொன்று பசியுடன் அவனைப் புசிப்பதைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சற்று தூரத்திலிருக் கும் வெசுவியஸ் மலையின் மீது கருமேகம் திரண்டு கொண்டி ருந்தது. திடீரென ஒரு பெரிய கர்ஜனை கேட்டது. பட்டப் பகலில் இருள் சூழ்ந்து விட்டது. வெசுவியஸ் எரிமலையின் அகண்ட வாய் தீயும், புகையும், சாம்பலுமாகக் கக்கிற்று. சற்று நேரத்திற்குப்பிறகு மறுபடியும் அதே கோரகர்ஜனை. குபீரென்று வெளிச்சமும் புகையும் மாறி மாறி எழும்பிப் பூமி அசைந்தது. பூமாதேவியின் இந்த பலத்த கோபத்தை பாம்பே மக்கள் பார்த்து பீதியுடனும் ஆச்சிரியத்துடனும் பிரமித்து விட்டார்கள். வெசுவியஸ் மலையிலிருந்து அந்தக் கந்தக வெள்ளம் நகருக்குள் ளேயே அதிவேகத்துடன் பாய்ந்து ஓடி வந்து விட்டது. என்ன செய்வோம், எங்கே செல்வோம், எந்தத் திக்கில் போனால் தப்பிப் போம் என்று கதறிக்கொண்டு இங்கும் அங்கும்பதறி ஓடினார்கள். குழந்தைகள் தாயை விட்டுப் பிரிந்துவிட்டன. உற்றார் உற வினர், சேர்ந்து இருந்தவர்கள் கூட்டத்தில் கலந்துவிட்டனர். கூண்டிலுள்ள சிங்கமும் கர்ஜித்தது. மூன்றும் நாள்தான் இந்த பயங்ரமான தீ மழை ஓய்ந்தது. பத்தடி உயரக் கல்லும், ஏழடி

'வானொலி' இதழில் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனு மதியுடன் வெளியிடப் பெறுகின்றது

உயரச் சாம்பலும் இந்த பிரசித்தி பெற்ற பாம்ப்பே நகரை மூடி விட்டன. பாம்ப்பே நகரம் ஒரே நிசப்தமாக இருந்தது. நகரத்தின் 20,000 ஜனத்தொகையில் பெரும்பாலும் தப்பினுர்கள். ஆனால் சுமார் 2000 பேர்கள் தப்பிக்க முடியாமல் மாண்டார்கள். பல நூற்றுண்டுக் காலமாக மதுவும், எண்ணெயும் வியாபாரம் செய்து கொண்டு வணிகர்களும், பெருமக்களும் திகழ்ந்த இந்த நகரம் கி.பி 79-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அடியோடு அழிந்து விட்டது. 1700 வருடங்கள் இவ்வாறு புதைந்து கிடந்த நகரை 1748-ம்ஆண்டு கண்டு பிடித்தார்கள். ஒரு விவசாயி தம் திராக்ஷைக் கொல்லையைத் தோண்டியபோது பல அருமையான சிலைகளைக் கண்டார். வெகு ஆச்சரியமடைந்து அதைத் தொடர்ந்து தோண்டியபோது, சிலைகள் மட்டுமல்ல, பலவித விசித்திர சாமான்களோடு ஒரு பெரிய நகரமே தென்பட்டது. இந்த நகரத்தைத்தான் சுமார் ஆறு வருடத்துக்குமுன்பு நானும் பார்த்துவிட்டு வந்தேன்.

இத்தாலியின் தலைநகரமாகிய ரோமாபுரியிலிருந்து தெற்கு நோக்கி மூன்று மணிநேரம் ரயில் பிரயாணம் செய்தபின் நேபில்ஸ் நகரத்தை அடைந்தேன். அங்கிருந்து பாம்ப்பே 15 மைல் தூரத்தில்தான் இருக்கிறது. ரயிலிலும் போகலாம். ஆனால் நாங்கள் ஒரு டாக்ஸி பேசிக் கொண்டு பாம்ப்பே சென்ரேம். வெசுவியஸ் மலையடி, சமுத்திரத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல் தொலைவில் இருக்கிறது. போகும் வழியெல்லாம் திராக்ஷைத் தோட்டமும் ஆலிவ், மற்ற பழவகை மரங்களும் ஏராளமாகப் பார்த்தோம். எங்கள் டாக்ஸி டிரைவருக்கு, ஆயிரக்கணக்கான பேர்களை அழைத்துச் சென்று பாம்ப்பேயின் கதையைச் சொல்லிச் சொல்லி நெட்டுரு ஆகிவிட்டது. எங்களிடமும் அந்தத் தெருக்களையும், வீடுகளையும் பற்றிச் சொல்லி எங்கள் ஆவலை அதிகரித்து விட்டார். கி. பி. 62-ம் ஆண்டு ஒரு முறை இந்நகரம் பூகம்பத்தில் அடிபட்டிருந்தது என்று தெரிவித்தார் அவர். இப்படிப் பேசிக்கொண்டே பாம்ப்பே வந்து சேர்ந்தோம். ஊருக்கு உள்ளே செல்வதற்கு ஒரு சிறிய கட்டணம் கட்டிவிட்டு ஒரு வழி காட்டியையும் அழைத்துக் கொண்டு நகரைச் சுற்றிப் பார்த்தோம். நம் இந்திய புராதன நகரங்களைப் போல் இந்த

நகரமும் அரண் சூழ்ந்திருந்தது. இதனுடைய சுற்றளவு 3300 மீட்டர். நாலாபக்கத்து வாசல்களையும் ஒன்றுகக் காவலுடன் பூட்டி வைத்துவிட்டால் எதிரிகள் உள்ளே நுழைய மாட்டார்கள் என்று தான் அவர்களுக்கு எண்ணம் போலும். அருகில் இருக்கிற எரிமலை அவர்களுக்கு இந்தத் தீங்கு செய்யும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

புராதன நகரின் அமைப்பு :

நான்கு பெரிய தெருக்கள் வடக்கு தெற்காகவும், மேற்குக் கிழக்காகவும் இருக்கின்றன. தெருக்களின் மூலையில் நகரத்தின் எல்லையைக் கூற, மொத்தம் எட்டு பெரிய கேட்டுகள் இருக்கின்றன. இந்நகரம் ஒன்பது பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

சமுத்திரக்கரையோரம் இருக்கும் வாசலுக்கு அருகில் மினர்வாவின் சிலை ஒன்று இருந்ததாம்.

இதன் இரு புறமும் தங்க விளக்கினுல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த விளக்குகள் இப்போது நேப்பிள்ஸ் நாஷனல் மியூசியத்தில் இருக்கின்றன. ஊர் முழுவதையும் நாங்கள் சுற்றிப்பார்த்தோம். அநேக வீடுகளில் கூரைகளே இல்லை. அந்த எரிமலையிலிருந்து பெரிய பெரிய பாறைகளும் வெகு உஷ்ணமுள்ள கந்தக பிரவாகமும் வந்து வீடுகளை மூடிக்கொண்டால் எவ்வளவு பலமாகத்தான் இருக்கட்டுமே, கூரைகள் தாங்குமா? ஆனுல் சில வீடுகள்மீது உடைந்துபோன, அரைகுறையான கூரைகள் இருக்கின்றன. நாலைந்து பெரிய தெருக்களைத் தவிர மற்றத்தெருக்களெல்லாம் ரொம்பக் குறுகலாகத்தான் இருக்கின்றன. சுவரில் சித்திரங்கள் எழுதி இருக்கின்றனர். தரை சில இடங்களில் பளபள வென்று இருக்கிறது. நிறமும் சில இடங்களில் பளிச் சென்று நன்றுகவே இருக்கிறது. நகராட்சியிலும், கலையிலும், வியாபாரத்திலும், பண்பாட்டிலும் முன்னேற்றம் அடைந்த நகரம் அது. அந்தக் காலத்து நாகரீகத்திற்கு பாம்ப்பே ஓர் உதாரணமாக இருந்தது. வீடுகள் ஒன்றோடொன்று ஒட்டி இடைவிடாமல் இருக்கின்றன. தெரு மட்டத்திலிருந்து சில வீடுகள் அவ்வளவு உயரமாக இல்லை.

சில வீடுகள் முன் "நல்வரவு" என்று எழுதியிருக்கும். வாயிலில் நுழைந்தவுடன் ஒரு இடை வழி. பிறகு நாலா பக்கமும் தாழ்வாரம், நடுவில் முற்றம். முற்றத்தின் வழியாக மழைத் தண்ணீர் போவதற்கு ஒரு வழியும் இருக்கிறது. சில சமயம் தேவையானபோது முற்றத்தை மூட வேண்டுமானால், அதற்கும் ஏற்பாடுகள் இருக்கின்றன. நாம் ஹால் என்று சொல்லும் அட்ரியம் என்பது மற்ற அறைகளைவிடப் பெரியதாய் இருக்கிறது. படுக்கை அறைகளும் மற்ற அறைகளும் சற்று சிறியவை. இந்த வீடுகளெல்லாம் சாதாரண ஜனங்களின் வீடு. பணக்காரர்களின் வீடுகள் விஸ்தாரமாக இருக்கின்றன. அறைகளும் அதிகமாக இருக்கும். விருந்தாளிகள் தங்கும் அறை, கக்ஷிக்காரர்கள் உட்காரும் அறை, புஸ்தக சாலைக்கு என்று தனித்தனி அறைகள் உண்டு. அந்தக் காலத்தில் ஒரு விசேஷம் என்ன வென்றால் பணக்காரர்களின் வீட்டில் அடிமைகள் இருப்பார்கள். அவர்களுக்கு இரவில் தூங்குவதற்கும், ஒய்வு நேரத்தில் தங்குவதற்கும் எந்த இடம் நியமிக்கப் பட்டிருந்தது தெரியுமா? இவர்களுக்கு மாடியில் ஒரு சிறிய இருண்ட அறை கொடுப்பார்கள். மாடிப்படிகள் எட்டு அல்லது பத்துதான் இருக்கும். நான் நாலைந்து படிகள் ஏறி அந்த இருண்ட அறையை பார்த்து விட்டு மடமட வென்று இறங்கி விட்டேன். வீட்டிலுள்ள பெண்மணிகள் தனி அறையில் இருப்பார்கள். அவர்களுக்கு அலங்காரம் செய்து கொள்வதற்கான மேஜை, கண்ணாடி, மற்றும் வேண்டிய பொருட்களை அங்கேயே வைத்திருப்பார்கள். வீடுகளின் பின்புறம் தோட்டம். அவை சிலைகளாலும் குமிழிடும் குழாய்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நான் இன்னொரு விநோதத்தைக் கண்டேன். சில வீடுகளின் முன் வாயிலுக்கு இரு புறமும் சுமார் நாலடி உயரத்தில் முக்கோண மான புரை இருந்தது. நம் கிராமங்களின் வீடுகளில் இந்த வழக்கத்தை அனுசரிக்கிறார்கள். தினமும் சாயங்கால வேளையில் இதில் அகல் விளக்கு ஏற்றி வைப்பார்கள் அல்லவா? அதே போல்தான் பாம்ப்பே மக்களும் செய்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டேன். அந்தக் காலத்திலும் வீட்டுக்கு வீடு குழாய் இருந்ததாகத் தெரிகிறது. ஒரு இடத்தில் துணி தோய்க்கக் கல்லும், அடுப்பும், பாத்திரம் வைக்க குழாய்க்கு அடியில் இடமும்

மற்றும் கம்பளித் துணிகளைச் சுத்தம் செய்ய இடமும் பார்த்தேன். இது ஒரு சலவைக்காரர் வீடாக இருந்திருக்க வேண்டும்.

தெய்வங்களும் கோயில்களும் :

கிறிஸ்துவ மதம் வருமுன் கிரேக்கர்களும், ரோமானியர்களும், மற்றும் ஐரோப்பாவிலுள்ள ஜனங்களும் நம்மைப் போலவே அநேக தேவதைகளை வணங்குவார்கள். ஹெர்குலஸ், ஜுபிடர், அபெல்லோ, ஹெர்மிஸ், பாக்கஸ, லேபேரா, வீனஸ் என்றெல்லாம் பல தெய்வங்கள்; ஊரைக் காப்பாற்றும் தெய்வம் வீனஸ் ஆகும். பாம்ப்பேயில் இந்தத் தெய்வங்களுக்கு ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. ஓர் இடத்தில் உடைந்துபோன தூண்கள் அனேகம் இருந்தன. ஆயிரக்கால் மண்டபம் அல்லது நூற்றுக்கால் மண்டபம் என்று நம்நாட்டில்இருப்பதுபோல் அதுவும் இருந்திருக்கலாம். அந்தக் காலத்தில் மக்கள் எப்படி வாழ்க்கை நடத்தினர்கள் என்று அந்தத் தெருக்கள், வண்டிச் சுவடுகள், குளம்புப் பதிவுகள், தங்கம், வெள்ளி நகைகள், கருகிய பழங்கள், ரொட்டி, பாத்திரங்கள், கோவில்கள், அரங்கம், சந்தைகள் எல்லாம் எடுத்துக் காட்டுகின்றன. எரிமலை வெடித்த அன்று யார் என்ன என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று கூடத் தெரிகிறது. எவ்வளவோ சிலைகளைப் பார்த்ததில் மிகவும் பரிதாபமான ஒரு காட்சியை நான் பார்த்தேன். ஒரு தாய் தன் குழந்தையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு படுத்திருக்கிருள். குழந்தை பால் குடித்த வண்ணம் இருக்கிறது.

இவைகளையெல்லாம் பாம்ப்பே மியூசியத்தில் வைத்திருக்கிருர்கள். சிலவற்றை நேப்பிள்ஸ் நாஷனல் மியூசியத்திலும் பார்க்கலாம். நிலமளக்கும் கருவி ஒன்றையும் நான் பார்த்தேன்.

இத்தாலி தேசத்தின் பலவித பழங்களும், தான்யங்களும், மதுவும், எண்ணெயும் ரொம்ப பிரசித்தம் ஆயிற்றே. பெரிய பெரிய மதுஜாடிகளை வீடுகளின் பாதாள அறையில் இன்றும் பார்க்கலாம். புளிக்கப்புளிக்க மது இன்னும் அதிகச் சுவையாக இருக்குமாம்.

பகல் நேரம் கண்டுபிடிப்பதற்கான ஒரு சூரிய கடியாரத்தை இப்போதும் பார்க்கலாம். நீதிமன்றம், நாடக சாலை, இசை

மன்றம், பொது ஜனங்கள் ஸ்நானம் செய்யும் இடம், நகராண்மைக் கட்டிடங்கள், பொதுச்சதுக்கம், வியாபாரம் நடத்தும் இடம், ஏலம் போடும் இடம், பலி கொடுக்கும் இடம் எல்லாவற்றையும் வழிகாட்டிக்ள் காண்பிப்பார்கள். கெட்ட நடத்தை உள்ளவர்களும், சோம்பேறிகளும், வேலை இல்லாதவர்களும் பொழுதைப் போக்கும் இடங்களும் இருக்கின்றன.

சமீபத்தில் பாம்ப்பேயின் எல்லைக்கருகே ஒரு பெரிய அரண்மனையைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள். ஐஸிஸ் கோவிலும் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித்தார்கள்.

நம்மைப் போலவே அக்கால மக்கள் சகுனம், அபசகுனம் பார்ப்பார்கள். நமக்கு அரசமரம், துளசி எப்படிப் புனிதமானவையோ அதேபோல் அவர்களுக்கு லாரல் மரம். தெருக்களில் வண்டிச்சக்கரம் ஓடின இடமும் குளம்பு பதிந்ததையும் பார்க்கலாம். சில தெருக்களில் பெரிய பெரிய பாறுங்கற்கள் புதைத்திருக்கின்றன. மழை இருந்தால் கல்லைத் தாண்டிக்கொண்டு மற்றொரு வீட்டுக்குச் செல்லலாம்.

நாங்கள் கடைசியாக திறந்த வெளி மன்றத்தைப் பார்த்தோம். அது நகரத்துக்குக் கிழக்கு முனையில் இருக்கிறது. சுமார் 20,000 பேர் உட்காரலாம். இப்போது அதன் படிகள் உடைந்து புல்லும் செடிகளும் நிரம்பி இருக்கின்றன. டிக்கட்டு கொடுக்கும் இடம், சாதாரண மக்கள் நுழையும் இடம், பெரியோர்களும், தனிகர்களும் வரும் இடம் எல்லாம் தனித்தனியாக இருக்கின்றன. சிங்கம், புலி இருக்கும் இடமும் பார்த்தோம். எனக்கு அந்த நாள் அதாவது கி. பி. 79ம் ஆண்டு ஆகஸ்டு ஞாபகம் வந்தது. பிற்பகல் பூராவும் சுற்றிவிட்டு நேப்பிள்ஸுக்குத் திரும்பச் சற்று களைப்பாக இருந்தாலும் வேகமாக நடந்தோம். சூரியன் மூழ்கி விட்டான். இருட்ட ஆரம்பித்தது. என்னுடன் வந்திருப்பவர்களும் என்னைப்போல் வெசுவியஸ் எரிமலையைப் பார்த்துக் கொண்டு வந்தார்களோ என்னமோ எனக் தெரியாது. நான் மட்டும் அதிலிருந்து புகை ஒன்றும் வாராமல் இருக்க வேண்டுமே என்று பிரார்த்தித்துக் கொண்டே கடைக்கண்ணால் அந்த சிகரத்தை பார்த்துக் கொண்டுவந்தேன்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

திருஞானசம்பந்தர்

அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

[மலர் 14. இதழ் 7-ன் தொடர்ச்சி]

9. **T**he Pandya King was afflicted with high fever and the attempts by the jains to cure him of this, proved futile. On the advice of his consort and the minister the King sent for Sri Triugnana Sambandar when the latter arrived on the scene. The jains said that they would cure the left side of the King's body and that Sri Triugnana Sambandar should try to cure the right. The pilgrim poet agreed to it and singing the praise of the sacred ash, besmeared the same on the right side of the King's body. The temperature came down immediately and the pain and fever on the left doubled.

பண் காந்தாரம் :

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு

(முன் பக்கத் தொடர்ச்சி)

உயிர் என்றால் எல்லாருக்கும் வெல்லமல்லவா? நீங்கள் பயப் படாதீர்கள்! உங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவசியம் பார்த்துவிட்டு வாருங்கள். வெசுவியஸ் எரிமலை கும்பகர்ணத் தூக்கம்தான் தூங்கிக்கொண்டு இருக்கிறது. அப்படியே அருகி லுள்ள 'காப்ரி' தீவையும் எட்டி பார்த்துவிட்டு வாருங்கள். உலகப் பிரசித்தி பெற்ற 'பளூ கிரோட்டோவையும்' அங்கு பார்க்கலாம்.

தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

"The sacred ash has mystic power (it is the mantra); and it is worn by the celestials. The ash bestows true loveliness and it receives worship. The ash itself is the Tantras and it is the essence of the religion. This is the ash of the Lord of Alavay, in whom dwells his divine consort, Uma."

10. On the request of the King, Sri Tirugnana Sambandar cured him of the fever totally. Then the jains insisted upon a second test. They said the tenets of religion should be written on a palm leaf and it be placed on fire. Sri Tirugnana Sambandar took out a leaf from among the bundle of hymns. It contained the padigam he sang at Tirunallaru. He laid it on the fire and to the dismay of all it remained unburnt. The jains, then, wrote out their doctrine on a palm leaf and placed it on fire. And it was immediately consumed by the flames.

பண் : பழந்தக்கராகம்.

போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

"Parameswara, who has shared His body with the divine beauty, Uma, who rides the white Bull, who is the supreme Lord of the celestials, who wears the tiger skin, and who has tied a snake around His waist on the loin-cloth, is our Lord and He dwells at Nallaru."

11. The jains insisted upon a third test which was just the same as the previous one except that the fire was replaced by water. All of them with the king

and Sri Tirugnana Sambandar reached the river Vaigai. The jains first placed the cadjan leaf containing the tenets of their faith in the water and it was washed away by the current. Then Sri Tirugnana Sambandar sang a padigam (a kind of benediction) and placed the palm-leaf containing the same in the river. It dashed against the current and raced ahead.

பண் : கௌசிகம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

"Blessed be the Brahmans, the celestials and the cows; May there be rain; May the king shine in glory. All forms of it be perished; Let Hara's name resound. May all sorrows flee from this world.

12. Kulachirai, the minister; rode a horse to collect the dashing leaf. Sri Tirugnana Sambandar prayed to Lord Siva and the leaf reached the bank at a place now-called Tiruvedagam. And Kulachirai brought it back to the King.

பண் : கொல்லி

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே.

"The Brahmans reciting the vedas worship the Lord with fresh flowers, and the devotees sing His praise. Such is the place Tiruvedagam. The Lord there adorns His head with various flowers and the crescent moon."

-(தொடரும்)

ஏத்தலும் பழித்தலும்

திரு. கே. சி. எம். மூக்கையா மன்றாடியார் அவர்கள்,
பெருநிலக்கிழார், தாண்டிக்குடி (கோடைமலை,)

இவ்வுலகிற்கு நாகரிகம் கற்றுக் கொடுத்த நம்மனோர், அந்நாகரிக வாழ்வின் சிறப்பினை வெளிப்படுத்தும் பண்பிற்குச் செவ்வையான சொல்வடிவம் ஆக்கித் தந்தனர். அத்தகைய சொற்களுள் ஈகை யென்பதும் ஒன்று. 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை' என்று உலகின் பெருமை பேசிய வள்ளுவனுக்கு மாற்றம் விடுப்பது போன்று, 'மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்' என்றான் கம்பன். அவனும் தான் அவ்வண்ணம் கூறுதற்கு ஈகையைத்தான் அடிப்படையாகக் கொண்டான். 'ஈவது யோகம் இயமம் நியமங்கள்' என்று ஈகையை, இயம நியமங்களோடு உடன் வைத்தெண்ணினார் திருமூலர். 'மேல் உலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்று, துறக்கவுலகத்தோடு ஈகையைத் தொடர்பு படுத்தினார் திருவள்ளுவர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த ஈதற்பண்பு இயற்கையாக ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழல் வேண்டும். அப்பண்பு உளத்தில் எழுந்து செய்யும் அறப்பயனால் வருவன, இம்மையில் இசையும், மறுமையில் இறவாத இன்பமுமாகும். மக்கட் பிறவி எடுத்தமையால் பெறப்படும் இப்பயன்களை எய்தா மக்களை, அவற்றை அடையும் பொருட்டு ஆற்றுப் படுத்தலும் உண்டு. ஆற்றுப் படுத்தற்கேற்ற சான்றோர், அவ்வக்காலங்களில் தோன்றி அறிவுரை கூறுவர்.

ஆற்றுப் படுத்தி, அறிவுரை கூற முயன்றோருள் தோல்வி கண்டோரும் உண்டு. தம் முயற்சியில் தளர்ச்சியுற்ற அச்சான்றோர், ஈயாதொழியும் அவ்வன்நெஞ்சரைப் பழித்துக் கூறி விடுவர். இவ்வாறு பழித்துக் கூறலை, அவ்வறவோர் தாமாக மேற்கொள்ளவில்லை. பழித்துக் கூறுவதற்கு உரிமை இருக்

கின்றதா? சட்டம் இடம் கொடுக்குமா? என்பதை அறநூல்களின் துணைகொண்டு ஆய்ந்தே கூறுவர்.

அவர்கள் பழித்துக் கூறும் செயலுக்கு அரண் செய்வது, தொல்காப்பியப் புறத்திணையியலில், 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்'(87)என்னும் நூற்பாவாகும். கொடுப்போரை ஏத்தலும், கொடாரைப் பழித்தலும், கொடுப்போரை ஏத்திக் கொடாரைப் பழித்தலும் என்று பொருள் விளக்கம் கூறுவர்.

கொடுப்போரை ஏத்துதல் சாலும், கொடாரைப் பழித்தல் எவ்வண்ணம் பொருந்தும்? கொடார் மனம் புண்படும்படி, கடுமொழி கூறல் தகுமா? சிந்தனைக் குரியதுதான்! 'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான் முருகன்' என்று கூறுவது போன்று, வைவின் மூலம் (பழிப்பின் மூலம்) மக்களை வாழவைத்தனர் அச்சான்றோர். செல்வத்துப் பயன் ஈதல்; வறியார்க்கொன்று ஈந்து, அதனால் இசைபட வாழ்தலே பிறவிப் பயன்.

முற்றொடர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வம்
இற்றைநாட் பெற்றோமென்று எண்ணாது பாழ்மனமே
அற்றவர்க்கும் ஈயாமல் அரன்பூசை ஓராமல்
கற்றவர்க்கும் ஈயாமல் கண்மறந்து விட்டனையே,

என்ற பட்டினத்தடிகள் பாடலில், முற்பிறவிப் பயனால் பெற்ற செல்வத்தைப்பிறர்க்குத் தானம் வழங்கல் வேண்டும் என்று கூறுகிறார். இந்த அடிப்படை உண்மைகளை வைத்துக்கொண்டும் தாங்கள் கூறுவதற்கு அடிப்படை உரிமை இருக்கிறதென்று எண்ணிக்கொண்டும், வைதாவது, அறம் செய்விக்க வேண்டும் என்று கூறினர்.

'நீ தந்துதான் நாங்கள் வாழவேண்டும்' என்று நயமாகக் கூறியும், 'நீ தராவிடில் பிறவிப் பயனை அடைய மாட்டாய்' என்று அச்சுறுத்திக் கூறியும் ஈகை யுணர்ச்சியை யூட்டினர். அதற்கும் இணங்காதவரை வைவின் மூலமாவது திருத்தி விடலாம் என்று எண்ணினர்.

இவை தவிர, அவர்கள் அவ்வாறு எடுத்துக் கூற மற்றொரு உண்மையும் உண்டு. பொருள் பெற்ற இரவலர், தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருந்தகையாளராய்த் திகழ்ந்

தனர். வறுமையிலும் செம்மையுடையவராய் வாழ்ந்தனர். வள்ளல்களிடத்துத் தாம் பெற்ற பொருளைத் தமக்கும், தம் குடும்பத்துக்கு மட்டும் என்று, எலி, வளைக்குள் தன்னுணவைப் பதுக்கி வைக்கும் எலி வாழ்க்கை வாழாது, உறவினர்க்கும், தம்போல் இரவலர்க்கும், மற்றும் வறுமையால் துயரப்படுவோர்க்கும் இல்லையென்னது ஈந்து விடும் சிறந்த செம்மனப் பண்பு உடையவராய் வாழ்ந்தனர். ஒரு வேளை, தம்மிடத்துப் பொருள் முட்டுப்பாடுற்ற விடத்து, தாம் பெற்ற வள்ளலிடம் தம்மைத் தேடி வந்த இரவலனை ஆற்றுப் படுத்தலும் உண்டு. வள்ளலின் இயல்பு கொடைச் சிறப்பு முதலியவற்றைக் கூறி, அவனிடத்துச் சென்ருல், நீ பரிசு பெறலாம் என்று கூறியனுப்புவர். கண்ணுற் காணமுடியாது, உள்ளுணர்வாற் காண முடிகின்ற கடவுளிடத்திலேயே அருளைப் பெற்றுவா (முருக வேளிடத்து நக்கீரர் ஆற்றுப் படுத்தல்-திருமுருகாற்றுப் படை) என்று ஆற்றுப்படுத்தும் சான்ருேர், மனிதரிடத்து ஆற்றுப் படுத்தாமலா இருப்பர்.

புலவர் பெருமக்களாகிய சான்ருேரின் இக்கருத்துக்களை ஆற்றுப் படை நூல்களிலும், புறநானூற்றுப் பாக்களிலும் விளங்கக் காணலாம். இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து எண்ணிப் பார்த்தால், 'கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தலும்' என்ற தத்துவம் எவ்வளவு உயர்ந்த நிலையில் கூறப் பட்டது என்பது போதரும்.

இவ்வளவு கூறியும் ஈயாத உலோபிகள் இருந்திருக்கின்றனர். அவர்களைக் கரும்புபோல் நசுக்கினுல்தான் வேண்டிய பயன் கிடைக்கும். சாம, பேத, தான முறைகளில் கூறியும் அவர்கள் உள்ளம் இரங்க மாட்டார்கள். அவர்களைப் பார்த்துத் தான் வள்ளுவர், ''ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும், கூன்கையர் அல்லா தவர்க்கு'' கையை வளைத்துக் கழுத்தில் இரண்டு போடுபோட்டால் தான் கொடுப்பார்கள்; இல்லாவிட்டால் எச்சிற்கையைக்கூட உதற மாட்டார்கள் என்று கூறினர்.

எனவே, 'பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லை, பிறந்து மண் மேல் இறக்கும் போது கொடு போவதில்லை, இடை நடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று' எண்ணி அறம் செய்து வாழ்வோமாக.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 7–ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

33. ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமுழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே.

Fresh pictures in another hymn set forth his sad condition. God's vessels are full of the sweetness of grace, but his spoon has no handle. He feels himself in the deadly grasp of fate, like the frog in the cruel mouth of the snake which is slowly swallowing it down. Or he is on a raft on the sea of life, wrecked on the rock of lust.

33. While violence is in my heart,
Care of my body cage is vain.
My spoon no handle hath when I
Thy honey's grace to drink am fain.
As in the serpent's mouth the frog,
Caught in life's terrors, wild I rave.
Thou, King of holy Ottiyur,
Wilt Thou not care for me and save?

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

ஈங்கோய் இலக்கியம்

திரு. கு. பழநிசாமி அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

உள்ளமும் உணர்ச்சியும்

உணர்ச்சிகளாலேயே நிறைந்து விட்ட இதயம் உண்மையைக் காண்பதில்லை. அறிவாராய்ச்சிக்கு அங்கே இடமில்லை. அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பும் அன்பு நிலத்தில் தவழ்ந்து அருள் ஒளியுடன் ஓடி வருமானால் அதிலும் ஓரழகு தோன்றும். எண்ண எண்ணச் சுவைக்கும். இன்பம் தரும். அதுவே சினமென்னும் முகட்டிலே பிறந்துவந்து வீரம், ஆணவம் ஆகியவற்றின் வழிச்செல்லத் தொடங்குமானால் அதன் விளைவு அஞ்சத்தக்கதாகி விடுகிறது.

பறவைகள், விலங்குகள் எல்லாங் கூட இவ்வுணர்ச்சிப் பெருக்கில் பலகால் சிக்கி அலமருகின்றன. உணர்ச்சிச் சுழலில் சிக்கித் திணருகின்ற அவர்களுக்கு அதனைப் பற்றித் தெரியாது. அவர்களுக்குப், புதுமையோ, வியப்போ, பிறவோ அதில் இல்லை. ஆனால் புறத்தே யிருந்து காண்கின்ற நமக்கே அது வியப்பாக இருக்கின்றது. இத்தகைய வியத்தகு காட்சிகள் சிலவற்றை ஈங்கோய் மலைக்காடுகளிலும் காணலாம்.

பிடியைப் பிரிந்த களிறு

பிரிவுத் துன்பத்தைக் கண்டறியாதது அந்தக் களிறு. ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை என்றபடி அவைகள் எப்படி வாழ்ந்தனவோ யாரறிவார்? ஆனால் அன்று அந்த யானை இணையில் பெண்யானை எங்கோ சென்றுவிட்டது. நிழலைப்போலப் பின்தொடரும் பிடியினைக் காணமை, களிற்றினைப் பெருவருத்தத்திற்குள் ஆழ்த்திவிட்டது.

எப்படி யெல்லாமோ சிந்திக்கிறது ஆண்யானை. தான் ஏதும் தவறு செய்து விட்டோமோ? அல்லது நமது கவனக் குறைவால் பெண்யானைக்கு ஏதும் தீங்கு நேர்ந்து விட்டதா? அதற்கு ஒன்றுமே தோன்றவில்லை. உலகமே அதற்கு ஊழிக் காலமாக மாறிவிட்டது. எங்குதான் சென்றிருக்கும்? அது தனித்து இதுவரை எங்குமே சென்றதில்லையே! காட்டில் அடிக் கடி சிங்கங்கள் வேறு வந்து தொலைகின்றன. அப்படி இந்தப் பிடிக்கு என்னதான் வேலை?

ஆண் யானையின் மூளையே வெடித்து விடும்போல ஆகி விட்டது. அங்கும் இங்கும் ஓடிப்பார்த்தது. அன்புக் குரல் கொடுத்துப் பிளிறிப் பார்த்தது. முன்னர் தாங்கள் இணையாகச் சென்ற இடங்களை எல்லாம் சென்று தேடிப்பார்த்தது. எங்கும் அதைக் காணவில்லை.

நாள் எல்லாம் அலைந்தாயிற்று. களிற்றுக்கு உடல் எல்லாம் அயர்ந்து உள்ளமும் சோர்ந்துவிட்டது. பிடிவரவேயில்லை. 'காதல் போயின் சாதல்' என்று அல்லவா கூறுகின்றனர்கள். இந்தக் களிற்றுக்குப் பயித்தியமே பிடித்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். வானத்தைப் பார்த்த வண்ணம் படுத்து விட்டது.

மேகங்கள் கருத்துத் திரண்டு வந்தன. அவைகள் கலை வதும் கூடுவதுமாகச் சென்ற வண்ணம் இருந்தன. திடீரென்று அந்த மேக மண்டலத்தில் தோன்றியது அதன்பிடி. ஆம். இது வரை அதுதேடிக் கொண்டிருந்த அதே பிடிதான்.

இதைக்கண்ட களிறு திடீரென்று எழுந்தது. அது எப்படி என் பிடி வானத்திற்குச் சென்றது? யாராவது மயக்கி அழைத்துச் சென்று விட்டார்களா? அல்லது வழி தெரியாமல் அங்கு சென்று விட்டதா? ஒன்றுமே அதற்கு விளங்கவில்லை. பிடியிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்ட மகிழ்ச்சி உள்ளத்தை நிறைத்து வழிந்தது. உற்று உற்று அதனைப் பார்க்கிறது. மேக வண்ணத்தில் தோன்றிய பிடியின் உருவைத் தன் பிடி என்று மயங்கிவிட்டது களிறு.

மேகம் மெல்லெனக் கலைந்தது. பிடியாகிய மேகம் இதனைப் பார்க்காமலேயே செல்வது போல இருந்தது. இந்த ஏமாற்றத்தைக் களிற்றினால் பொறுக்கவே முடியவில்லை. அழுகையே வந்துவிடும்போல் இருந்தது.

ஏ, பிடி! நான்தான்! இதோ இருக்கிறேன். என்னைத் தெரியவில்லையா? எங்கெல்லாம் உன்னைத் தேடி அலைவது? வா...... இங்கே! என்று தனது தும்பிக்கையை மேலே காட்டிக் காட்டி அழைக்கிறது.

பிடியுருவில் இருந்து கலையும் மேகத்திற்கு களிற்றின் பரிதவிப்பு எப்படித் தெரியும்? களிற்றின் வேதனையைக் கார்முகில் உணருமா? மேகங்கள் அடிவானத்திற்கு அப்பால் சென்று மறைந்துவிட்டன. மனம் நிறையாது சஞ்சலப்படும் அந்த யானையின் காட்சியை,

பிடிபிரிந்த வேழம் பெருந்திசை நான்கோடி
படிமுகிலைப் பல்காலும் பார்த்திட்டு—இடரா
இருமருப்பைக் கைகாட்டும் ஈங்கோயே வானோர்
குருவருள்குன் றாய்நின்றான் குன்று.

என்று படம் பிடிக்கிறது ஒருபாடல்.

பொய்மைத் தோற்றம்

ஒன்றை மற்றொன்றாக எண்ணி மயங்கும் நிலை உயிர்களிடத்தில் எல்லாம் உண்டு. பலபோது இம்மயக்க நிலையினால் இழப்பது ஒன்றும் இல்லை என்றாலும் சிலபோது அச்சமும், ஏமாற்றமும் அதிகமாவது உண்மையே!

காட்டுப் பன்றிகள் கோரை முதலிய கிழங்குகளுக்காக நிலத்தைக் கிண்டுகின்றன. வளம் பொருந்திய அம்மலைப் பிரதேசத்தில் அவைகள் வாய் வைத்துத் தோண்டுகின்ற இடங்களில் எல்லாம் செம்பவள மணிகளே மிளிர்ந்து கொண்டு வெளி வருகின்றன. கிழங்கு வகைகள் அதிக மின்மையின் பன்றிகள் வேறிடங்கள் நாடிச் சென்று விடுகின்றன. இவ்வாறு வெளியெங்கும் அப்பன்றிகள் செயலால் பவளங்களே பரந்து காட்சியளிக்கின்றன.

செக்கச் சிவந்த அம்மணிகள் கதிரவன் ஒளியில் தக தக வென்று எரிகின்றன. இந்தக் காட்சி அந்த நிலமெல்லாம் தீப்பிடித்துக் கொண்டு எரிவதுபோல் காட்சி யளிக்கிறது.

எதோ சிந்தனையுடன் அவ்வழியாக வருகின்றது ஒருயானை. எரிகின்ற நிலத்தைப் பார்த்ததும் அதற்கு ஒரே அதிர்ச்சி. என்ன இது ஒரே தீ யல்லவா பிடித்துக்கொண்டு எரிகிறது! இவ் வழியில் வந்து மாட்டிக் கொண்டோமே என்று அப்படியே திரும்பி ஓடிப் பசிய மரச் செறிவுக்குள் நுழைந்து விடுகிறது. பொய்த் தோற்றத்தை மெய்யெனக் கொண்டு அஞ்சிப் பின் வாங்கும் இக்களிற்று யானையின் செயலைப்,

பன்றிப் பருக்கோட்டால் பாருழுத பைம்புழுதித்
தென்றி மணிகிடப்பத் தீயென்று—கன்றிக்
கரிவெருவிக் கான்படரும் ஈங்கோயே வானோர்
மருவரியான் மன்னும் மலை

என்ற பாடலில் காணலாம்

எள்ளி நகையாடும் முல்லை

அடுத்துவரும் பாட்டிலும் இக்காட்சியினையே காண்கிறோம். அங்கே ஒரு யானைக்கூட்டமே இப்பொய்த்தீயினை மெய்யான தீ என்று எண்ணி வெருவி ஓடுகின்றது. அந்தப் பகுதியில் மலர்ந் திருக்கும் முல்லைப் பூக்களும் நம்மோடு சேர்ந்து கொண்டு அறி வில்லா யானைகளின் இச்செயலைக்கண்டு சிரிக்கின்றன.

முல்லை மலர்கள் இயற்கையாகவே மலர்ந்திருக்கின்றன. யானைக்கூட்டம் தீயைக்கண்டு அஞ்சி ஓடுகின்றது. இதனைக் கண்டு முல்லை மலர்கள் நகைக்கின்றனவாம். நமது தீவினைகளைப் போக்கியருளும் இறைவன் எழுந்தருளும் மலை இப்படிச் சுவை யான இயற்கைக் காட்சிகளை உடையது என்கிறார் நக்கீரர்.

ஏனம் இளைத்த இனபவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி—யானை
இனம்இரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு

என்பது அப்பாட்டு.

சிங்கத்தின் சீற்றம்

அந்த யானைக்கு மதங்கொண்டு விட்டது. அதன் காதற் பிடியும்கூட அதன் அழிவினின்றும் இனி தப்பமுடியாது. அங்கேயும் இந்த அழிவுச் செயல்தான் நடந்துகொண்டிருக்கிறது. எவ்வளவோ இரக்கத்துடன் கதறுகின்ற பெண்யானையை விடாமல் அடித்துத் துன்புறுத்துகிறது. ஆத்திரம் அதன் கண்ணை மறைத்துவிட்டது. மடப்பிடி சோர்ந்து குற்றுயிராக விழுந்து விட்டது. மதநீர் மேலும் மேலும் பெருகுவதால் நெறிபிறழ்ந்து ஓடுகிறது அக்களிறு.

அதற்கும் சிறிது தொலைவில் இருங்கல் விடரகம் புலம்ப வேட்டெழுந்து எதிரே சிங்கம் ஒன்று வந்துகொண்டிருக்கிறது. அதற்குள்ள பசியில் அதன் போக்கில் யார் என்ன தடைசெய்தாலும் மருந்திற்கும் அவர்கள் பிழைக்கமுடியாது. ஆனால் வழியில் இருக்கின்ற செடிக்கு அது எப்படித்தெரியும்? சிங்கம் வரும் வழியில் தடையாக அது வளர்ந்திருக்கிது. ஏதோ நோக்கமாக வந்த சிங்கம் அதில் மோதிக்கொள்கிறது. இதைக் கண்ட உடன் கண் தெரியாமல் கோபம்வருகிறது சிங்கத்திற்கு. இந்தச் செடி நம்மைத் தடுத்துவிட்டதே என்று எண்ணிச் சினம் மூண்டுவிட்டது சிங்கத்திற்கு. கடுஞ் சினத்துடன் செடியினைப் பிய்த்துப் பிய்த்து எறிந்துவிட்டுப் பொருமலுடன் வந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சிங்கமும் அந்த மதயானையும் ஒன்றை யொன்று சந்திக்கின்றன. கனல் கக்கும் நான்கு விழிகள் சந்திக்கின்றன. பெரும்போர் ஒன்று நிகழ்வதுதான் இயற்கை யல்லவா? அது தான் இல்லை! சிங்கத்தின் சீற்றத்திற்குமுன் யானையின் மதம் குறைந்து விடுகிறது. சீ....என்ன இது தொல்லை! சிங்கமல்லவா வருகிறது என்று வேறு திசையில் திரும்புகின்றது யானை. மதத்தின் கடுப்பு வேறு; சிங்கத்தின் சீற்றம் வேறு; ஒன்றும் புரியாமல் தடைப்பட்டு நிற்கிறது அந்த யானை. இந்தக் காட்சியை அவ்வழகுபட அப்படியே கூறுகின்றார் கவிஞர்.

செடிமுட்டச் சிங்கத்தின் சீற்றத்தீக் கஞ்சிப்
பிடியட்ட மாக்களிறு பேர்ந்து—கடமுட்டி

என்னேசீ என்னும்சீர் ஈங்கோயே ஏந்தழலின்
பொன்னேர் அனையான் பொருப்பு.

இப்படி எத்தனையோ தொல்லைகளால் தாக்குண்டு ஓடி வருகின்றது மற்றொரு யானை. அச்சம் மிகுதியினால் ஓடி மலைக் குகை ஒன்றில் நுழைந்து விடுகின்றது. பின்னர் சற்று உடல் அசைவைப் போக்கிக்கொண்டு வெளியே வருகிறது. தொல்லைகள் ஏதும் அற்ற இடம் என்று சற்று ஆறுதலாக மெல்ல நடந்து வருகின்றது. ஆனால் அதுதான் எவ்வளவு ஏமாற்றமாகிவிடு கின்றது. ஒருமலைப் பாம்பு அதன் காலைக் கவ்விக் கொள்கிறது. பல நாளாய்ப் பசியோடு கிடந்த அந்தப் பாம்பினைக் குனிந்து பார்த்த யானையின் உடல் எல்லாம் நடுங்குகின்றது.

காடெல்லாம் கலங்க அலறுகிறது. ஒரே பிளிறல் ஒலி. அச்சம், சினம் ஆத்திரம் இவைகளோடு வானத்தில் செல்லும் மேகத்தை எட்டிக் கலக்கிறது. மேகம் என்ன செய்யும்? ஆதி மூலமே என்று அதற்குக் கத்தத் தெரியவில்லை. ஆயினும் ஆதிமூலம் வண்ணத்தில் வந்த மேகத்தைப் பிடித்து உருஞ்சு கிறது. அது என்ன கண்ணனா வந்து உதவ? கார்மேகந்தானே!

இதனை

நாகம் முழை நுழைந்த நாகம்போய் நன்வனத்தில்
நாகம் விழுங்க நடுக்குற்று—நாகந்தான்
மாக்கையால் மஞ்சுரிஞ்சும் ஈங்கோயே ஓங்கியசெந்
தீக்கையால் ஏந்தி சிலம்பு

என்று கூறுகிறது பாடல். இவ்விதம் விலங்கினங்களின் பல வேறு செயல்களைச் சுவைபடப் பேசும் பாடல்கள் பல ஈங்கோய் மலை எழுபதை அழகுசெய்கின்றன.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 14, இதழ் 7-ன் தொடர்ச்சி]

கணக்கிலவதானி — கணக்கறிந்தச் சுற்றே
இணக்கமொடுன் சந்நிதிவந் — தேத்தவருள் சற்குருவே. 41

கோதில் கருங்குழியில் — குட்டநோய் கொண்டவற்குப்
பூதியளித்தவ் வினையைப் — போக்கியருள் சற்குருவே. 42

ஆத்திகர் சூழத்தலத்தோர் — அன்பனுக்குப் பூதிதந்து
நேத்திரமா ருட்டமதை — நீக்கியருள் சற்குருவே. 43

நல்லவர்சூழ் கூடலூர் — நாராயணசாமி
வல்லபெரு நாப்புற்றை — மாற்றியருள் சற்குருவே. 44

அப்பரையாழிக் கரைசேர்த் — தாள்பா திரிப்புலியூர்
செப்பரிய வாற்றுவிழா — சேவித்த சற்குருவே. 45

திகழ்வடி வினைப்பூசை — செய்யலா காதென்ற
அகமுடையோர் கூற்றை — யடக்கியருள் சற்குருவே. 46

வேட்டவை யெல்லாமளிக்கும் — வேட்டவலச் சீமான்தன்
வேட்டமனை யார்தம் — வினையொழித்த சற்குருவே. 47

கோலமிகும் வேட்டவலக் — கோமானைச் சுத்தமுறும்
சீலமிகும் சீடனெனச் — செய்தருளும் சற்குருவே. 48

பார்வதியும் சீராய்ப் — பகர்வடலூரென் கின்ற
பார்வதி புரத்தினிலே — பற்றியமர் சற்குருவே. 49

வருமன்பர் மற்றையர்க்கும் — வந்துண் டிருக்கத்
தருமச்சாலையை யன்பால் — தாபகம்செய் சற்குருவே. 50

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளை யவர்கள் இயற்றியது.

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 7-ன் தொடர்ச்சி]

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேருதல் வேண்டும்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யார் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

புண்ணை அறுத்தற்குரிய கருவியாகிய கத்தியினால் அறுத்து ஆறும்படி செய்வார்கள். அவ்வாறின்றி அப்புண்ணை மறைத்து வைத்து மூடமாட்டார்கள். அதுபோல வெளிப்படையில் நட்புடையவர்கள் போல இருந்து உள்ளத்தில் வெறுப்புக் கொண்டவர்களது நஞ்சு போன்ற அகப்பகைமையை வெளிப்படுத்தி அவரை விட்டுப் பிரிந்து வேருயிருத்தலே தகுதியுடையதாகும். அவ்வாறின்றி அவ்வஞ்சகர்களிடம் யாரும் பெரிய தாட்சணியத்தைக் கொள்ளமாட்டார்கள்.

Getting rid of friendly enemies

Do not hesitate to expose the hollowness and renounce the relationship of those who hide malice under the cloak of friendship. Do not show any kind of compassion towards them; for an abscess is not covered up with tenderness but cut up with a surgeon's knife and healed. 56

Translated by: Sri P. Mutharasu M. A. B., T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்—திட்பமா
நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து.

நண்பர்களிடத்தில் வஞ்சகம் செய்யக்கருதி மறைவாகத் தீச்செயல்களைச் செய்ய முற்பட்டுப் பகைவர் சார்பினராய் வேளை பார்த்துக் காத்திருப்பவர்களுக்குத் திண்ணமாக அப்பொழுதே வாழ்நாள் முடிந்து அவர்கள் செத்தவர்களோடு சேர்த்தே எண்ணப் பெறுவார்கள். அவர்கள் உயிரோடு வாழ்வதற்குக் காரணம் நடுவனாகிய கூற்றுவன் நியாயமின்மை கருதி அவர்களை மறந்திருப்பதேயாகும்.

Treacherous friendship

In respect of those who profess friendship and devise evils treacherously in secret, taking the side of enemies, surely the appointed day of their life has gone by; but it may be that Yama lies carelessly forgetful of their wickedness. **57**

மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகும்—எனைத்துணையும்
தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

மனத்திலே பிறிதொருவனிடத்து மிகுந்த கோபம் இருக்குமாயின் அவன் நல்ல காரியங்களையே செய்தானாயினும் அவையனைத்தும் தீய காரியங்களாகவே தோன்றும். களங்கமில்லாத நல்ல மனத்தையுடையவர்கள் எவ்வளவு தீய காரியங்களைச் செய்தாலும் அவையனைத்தும் நல்லனவாகவே காணப் பெறும்.

Purity of heart

Where there is stain on the heart even good deeds will be received as evil; but those of pure hearts will look upon even deliberate evils done to them, as good ones. **58**

இனியவர் என்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியும் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும்.

தீயைப் போலச் சுடுகின்ற வெங்காரமானது வெப்ப முடையதாயினும் உடற்பிணியை நீக்கி நன்மை பயக்கும். அது போல நல்லுள்ளம் படைத்தவர்கள் எத்தகைய கடுஞ்சொற்களைச் சொன்னாலும் அவை பின்னர் இன்பத்தைத் தருவனவாதலால் இன்சொற்களேயாகும். நஞ்சு உடலில் புளகம் தோன்றும்படி குளிர்ச்சி உடையதாயிருந்தாலும் உண்டவரைக் கொன்று விடும். அதுபோலப் பகைவர் உளங்கனிந்து பேசும் இனிய சொற்களும் பின்னர்த் தீமை தருவன வாதலால் நஞ்சை ஒப்பன வேயாகும்.

Honeyed Words -- Kind and unkind

The words of the kind - hearted, whether they are harsh or sweet, will still be sweet, as they result in good; but the honeyed words of the unkind will certainly be bitter in result. Borax, though it burns will cure disease; but poison though cool will kill. 59

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து—மெய்யிற்
புலமைந்தும் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல்.

பேசுகின்ற சொல்லில் பொய்யும் புறங்கூறலும் கடுஞ் சொல்லும் பயனில் சொல்லுமாகிய இந்த நான்கு குற்றங்களும் வந்து சேராமற் பாதுகாத்து உடம்பிலே ஐம்புலங்களையும் அவ்வ செல்லுமாறே செல்லவிடாது அடக்கியாண்டு மனக்குற்றங்களை நீக்கி வாழும் நன்மை அல்லவா நல்வழி என்று சொல்லப் பெறுவது.

The righteous path

Virtue which consists in avoiding falsehood, slander, harsh words and meaningless speech, in having the five senses under proper control and in removing all the impurities from the heart, is called the righteous path. 60

(தொடரும்)

அளவில் ஒளி

வழியிலா வாழ்க்கைஈ(து) என்று வெறுக்காமல்
பழியிலா ஓர்சீர் பிழைக்கும்—வழியில்
களவிலா அன்பினைநீ கண்டே உழைப்பின்
அளவில் ஒளிகாண்பாய் அங்கு.

Prof. S. K. EKAMBARAM,
B. Sc. [Hons]. M. A. [Cantab] F. S. S. [London].

"ஞானசம்பந்தம்"
அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

'சித்தம் சிவனோடு ஆடியது'

திரு. கவிவாணன் அவர்கள்,
தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, கடையம்.

இன்ப மலைக்கண் இயற்கைப் பெருங்காட்சி,
துன்பந் தழைக்கவரும் ஆணவமாம் ஓரருவி
இன்ப உலகில் இழிந்துவர ஆருகும்!
இன்பக் கனவுடைய புள்ளும் விலங்குகளும்
ஓசை முழக்கோடே ஓரத்தில் நின்றிருக்க

ஆசையெனும் வேட்கை அகத்தடக்கி யோடிவரும்
விந்தை மனிதனும் 'வேதனையான்' அவ்வாற்றில்
சிந்தை பறிகொடுத்தே யள்ளிப் பருகிட்டான்!
மாலை யொழிந்து மயங்குகின்ற வேளையிலே
சோலை யடுத்தோர் வெறுங்கோயில் கண்டங்கே

சென்றான் நினையானுய்ச் சிறபத்தைக் கல்லென்றான்!
நன்று துயில்கொள்ள நங்கையிருள் வந்தணைந்தாள்!
கையில் தலைவைத்துக் கால்நீட்டிக் கண்வளர்ந்தான்
மெய்யில் அரையாடை மேனிவிதிர் நீர்வாடை,
கானக் குயிலிசைக்கும் காதற் கனவினிலே

ஊனம் உருகிவிட்டான் உண்மையினை யோராதான்
போட்டியிடுங் கோட்டானும் புன்மை நரிகளுமே
காட்டினிலே கத்திவரக் காசரவம் மேலூர,
மோன முனியொருவன் மொட்டவிழும் பார்வையிலே
ஆன பயன்காட்ட ஆசை யெழுப்ப

விழித்தான் விடியவில்லை! தன்பாசக் கண்ணீர்க்
குளித்தான் இழந்திட்ட தந்தையையும் தாயையுமே

எண்ணி வினையெல்லாம் நொந்தே யெழுந்திட்டான்
கண்ணீர் துடைத்திட்டான் காலை யிளையோனும்!
ஆற்றங் கரைவந்தான் ஆணவநீர் ஓடவில்லை

ஆற்று நிரைமணல்போல் ஆர்ந்தபல வெண்ணங்கள்
அன்பென்னும் ஊரில் அழைத்துவிட ஆங்கோர்நல்
நண்பென்னும் வீட்டில் நயந்து பணிசெய்ய
இப்பிறவி நற்பயனும் இன்னருளைப் பெற்றுள்ளம்
அப்பிறவி சேர்ந்தே அனைத்துயிரும் வாழ்விக்கச்

சென்றான் தெருவெல்லாம் சீர்தெளித்தான் ஆவியெல்லாம்
கண்டான் இறைவனெனக் கண்ணீர்ச் சுவைபெற்றான்!
சுற்றித் திரிந்த சுமைபெற்ற ஆணவங்கள்
எற்றித் திரிந்த எழிலழிக்கும் வஞ்சங்கள்
கூடிச் சிரித்துக் குலாவியுமே அன்னோனைச்

சாடி யழித்திடவும் சாகவில்லை! நெஞ்செல்லாம்
தெய்வமெனுஞ் சித்தத்தாற் பித்தனெனப் பேரெய்தி
உய்யு நெறிகாட்டும் அக்கோயில் வந்தவுடன்
கல்லுங் கரும்பாய்க் கருத்துருக்குந் தெய்வமுமாய்ச்
சொல்லும் அமுதமொழி சொல்லலதற்கு நாவில்லை!

இன்பப் பிழம்பே! இணையில்லாக் கண்மணியே!
அன்புப் பழமே! அனைத்துயிரை யாட்டிடுவாய்!
திங்களும் பாம்புத் திருச்சடையிற் கொண்டவனே!
துங்கத் தமிழிசைக்குத் துள்ளிவரும் எம்மானே!
அந்தோ! அரனே! என்றிசைக்கும் போதிலொரு

பந்துபோல் வீசுமொளி பாய்ந்ததுவே! அன்னோனின்
சித்தமெலாம் பொங்கிச் சிவனோடே ஆடியதே!
வித்து முளைத்ததுகாண் விந்தையாம் இவ்வுலகில்!
நற்சமயம் பேணும் நமர்!

தாயுமானவரின் — பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

I

St. Thayumanavar is one of those who have contributed for the ever-living and the spontaneous flow of devotional literature in the Tamil country. He belongs to the period of Nayaks of eighteenth century. All his songs are collected under the title of "Thayumanavar songs." His Hymns are simple to read and lucid in expression. They are noted for this religious fervour and higher philosophies. For him the two systems of philosophies i.e the Siddhantha and the Vedhantha are on a par with each other.

'Para Para-k-Kannigal' is one canto of his collected poems. 'Kannigal' is a kind of folk-lore type of songs of couplets. The last word in each couplet is addressed as Paraparam meaning the Lord of the Universe. So the entire part of these lyrics are named after that word as Parapara-k-Kannigal.

குறிப்பு: தாயுமான சுவாமிகளின் "பராபரக கண்ணி"களுள் தெளிந்தெடுத்த சில பாடல்களுக்குப் பொழிப் புரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும், "குமரகுருபரனை" நிறுவிப் பேணியருளுகின்ற ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளிப்பாடு செய்தருளிய வண்ணம், இதழுக்கு ஒரு கண்ணி வீதம், 'திங்கள்' தோறும் வெளியிடப் பெறும்.

Translated by: Sri. K- PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

In these lyrics, our Poet describes in a moving language, the true nature and the real glories of the Supreme Being. The Soul's unquenchable thirst to become one with God is brought out vividly and inspiringly.

Now in the present translation we can see some selected songs with their excellences mentioned above.

"சீராரும் தெய்வத் திருவருளாம் பூமிமுதல்
பாராதி யாண்ட பதியே 'பராபரமே"

பொழிப்புரை :-

சிறப்பு வாய்ந்த தெய்வத் தன்மை பொருந்திய திருவருள் என்னும் பூமி முதலாக நிலஉலகம் முதலாய பூமிகளை ஆண்டு அருளிய தலைவனே! பராபரமே!

விளக்க உரை :-

திருவருளாம் பூமி 'என்றது முப்பத்தாறு தத்துவங்கட்கும் ஆதாரமாயுள்ள' சிவசக்தியினை'

O........God Supreme! O......my Lord! You are the unquestioned monarch of all the universe from the divine land of grace down to the material worlds, the earth etc.

Though, Siva and Sakthi are inseparable, Siva is the Lord of Sakthi. This Siva-Sakthi which is the very basis for all the thirty six categories of Siddhantha is denoted here by the term "divine land of grace or திருவருளாம்பூமி.

(தொடரும்)

உ
சிவ சிவ

சித்திராபௌர்ணமியில் அருணஜடேசுவரர் சந்தன மெய்ப்பூச்சு நிதி ரூபா 4,000/-

"கண்பொலி நெற்றியினன் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே"

என்று செந்தமிழால் மிகு ஞானசம்பந்தன் நல்ல பண்ணியல் பாடல் பாடிய தலமாயதும்,

"மாலைசாத்தும், தாடகை மானங் காப்பான் தாழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலயன் அன்பின் நிமிர்ந்தஎம் பிரானூர் ஈதால்"

என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துப் பாடிய தலமாகியதுமான திருப்பனந்தாள் தாடகையீச்சரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு, பின் 3-வது பாராவில் விவரித்துள்ள வண்ணம் சந்தன மெய்ப்பூச்சு அளித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந் நிதி நிறுவப் பெற்றது. இது "சித்திரா பௌர்ணமியில் அருண ஜடேசுவரர் சந்தனமெய்ப்பூச்சு நிதி" எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற் பொருள் ரூ. 4,000/- (ரூபா நான்காயிரம்) இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோான் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் எண் சிஏ. 241616 – ரூ. 2000/-, சிஏ. 241617 – ரூ. 2000/- ஆக ரூ. 4000/- இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப் பெற்று வரும்.

3. வழிவழிச் சிவபக்திச் செல்வம் பெருக்கிய சோழவரசர்களுள் இரண்டாம் இராசராசசோழன் (1146 – 1163) தன் சிறப்புப் பெயரால் 'இராசகம்பீரன் திருவீதி' என்று பெருவழியை ஏற்படுத்தித் திருப்பனந்தாள் ஸ்ரீ தாடகேச்சரத்து எழுந்தருளியுள்ள ஸ்ரீ அருணஜடேசுவரர் கொள்ளிடத்தில் தீர்த்தமருள எழுந்தருளச் செய்த அரிய சிவப்பணியை முன்னிட்டு, அதுபோலவே ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழாவில் கொள்ளிடத்திற்குப் பஞ்சமூர்த்திகளுடன் ஸ்ரீ அருணஜடேசுவரரை எழுந்தருளச் செய்து தீர்த்தவாரி மண்டகப்படி நடத்துவித்தற் பொருட்டு நம்மால் 2—1—1954ல் நிதி நிறுவப் பெற்று ஆண்டுதோறும் கொள்ளிடத் தீர்த்த விழா மண்டகப்படி நடத்துவிக்கப் பெறும் நாளில், ஸ்ரீ அருணசடேசுவரர் கொள்ளிடத்துக்குத் தீர்த்தம் அருளுதற் பொருட்டு எழுந்தருளுங்கால் சித்திரா பௌர்ணமி நாளில் தாடகையீச்சரத்து ஸ்ரீ அருணஜடேசுவரராகிய சிவலிங்கத் திருமேனிக்குச் சந்தன மெய்ப்பூச்சு அணிவித்தற் பொருட்டு, இந்நிதியினின்று வரும் வட்டித் தொகை பயன்படுத்தப்பெற்று வரும்.

4. வட்டி வரவுக்கு ஏற்பவும் கால விலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி மேற்கண்ட சந்தன மெய்ப்பூச்சு ஆண்டுதோறும் நடத்துவிக்கப் பெறும்.

5. இத் தொகை வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் அரசினரால் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெறும். இது நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும்.

" திருப்பனந்தாள் தாடகைய ஈச்சரத்தான் பாதமே ஏத்து "

— *க்ஷேத்திரத் திருவெண்பா - ஐயடிகள் காடவர்கோன்.*

Tirupanandal
Dated 19–3–1963. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudur Sub-Registrar's Office as No. 18 of 1963 of Book 4 volume 50 pages 157 to 159 dated 20-3-1963.